எஸ்.டி.சி.எண்.2527/22
PW 1
பெயர் மகாதேவன்
தேதி 27.11.23
**( 1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**.)**
<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து **3**ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அன்றையதினம் யார் உத்தரவின் பேரில் ரோந்து பணிக்கு சென்றேன் என்றால் சார்பு ஆய்வாளர் உத்தரவின் படி சென்றேன். அன்றையதினம் எந்த எந்த பகுதிக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் பிசிபட்டி , ஆதிபட்டி, பூதிப்புரம்ஆகிய பகுதிகளுக்கு சென்றோம். சார்பு ஆய்வாளர் சேர்ந்து மொத்தமாக தான் ரோந்து பணிக்கு சென்றோம். சம்பவ இடத்தில் மது விற்பனை நடப்பதாக யார் தகவல் கொடுத்தது என்றால் சார்பு ஆய்வாளருக்கு தான் தகவல் வந்தது. சம்பவ இடத்திற்கு ரோந்து பணிக்கு சென்றபோது யார் எதிரியை முதலில் பார்த்தது என்றால் நாங்கள் மொத்தமாக தான் சென்றோம். ஒயின்சாப்பிற்கு பின்புறம் மூன்று எதிரிகளும் இருந்தார்கள். சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால்சரியல்ல. 500மீட்டர் தூரத்தில் தான் குடியிருப்பி பகுதி உள்ளது.அந்த பகுதியில் மெயின் ரோட்டில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாகஇருக்கும் என்றால் சரிதான். நாங்கள் செல்லும் போது முதல்விசாரணையில் கூறியுள்ள டாஸ்மாக் கடை திறந்து தான் இருந்தது. டாஸ்மாக் கடையில் அந்த சமயத்தில் மதுவிற்பனை நடந்துக்கொண்டிருந்தது. டாஸ்மாக் கடையில் 3ம் எதிரி தவிர்த்து விற்பனையாளர் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 2 பேர் இருந்தார்கள். மேற்படி விற்பனையாளர்களை சார்பு ஆய்வாளர் விசாரித்தார். நான் விசாரிக்கவில்லை. 1ம் எதிரி கொடுத்ததாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் எழுதினார். அத்தாட்சி , ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை தயார் செய்ததது யார் என்றால் சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் எழுதியபின்பு தான் 1ம் எதிரியிடம் கையெப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான. 1ம் எதிரி சொல்ல சொல்ல எழுதி கையெழுத்து பெற்றார். எதிரியிடமிருந்து பணம்எதுவும் பறிமுதல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை புகைப்படம் எடுக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் கொரானா நேரம் என்பதால் அந்த சமயத்தில் அரசு மதுபானகடைகள் காலை 10மணி முதல் இரவு 8மணி வரை தான் திறந்திருக்கும் என்றால் எனக்கு ஞாபகம்இல்லை. மேற்படி அரசு மதுபான கடையில் 3ம் எதிரி சூப்பர்வைஸ்ராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். பொதுவாக அரசு மதுபான கடைகளில் சூப்பர் வைஸ்சர் பதவிக்கு விற்பனையாளர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் சேர்க்கப்பட்டார்களா என்றால் சார்பு ஆய்வாளர் அழைத்து வராததால் தனிப்பட்ட சாட்சிகள் சேர்க்கபடவில்லை. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு ஆட்டோவில் கொண்டு சென்றோம். 3ம் எதிரி எந்தவிதமான சட்டவிரோதமாக மது பாட்டில்கள் எதையும் விற்பனை செய்யவில்லை என்றும் வழக்கில் 3ம் எதிரியை தவறாக சேர்ததுள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் ஆள்நடமாட்டம் உள்ளபகுதி என்றும், தனிப்பட்ட நபர்களை சாட்சியாக சேர்த்திருக்கலாம் என்றும் புள்ளிவிபரகணக்கிற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால்சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் 3ம் எதிரி இருந்திருந்தால் அவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. அதனை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தோமா என்றால் அவர் கேட்கவில்லை நாங்கள் ஒப்படைக்கவில்ல. சொன்ன தேதி ,நேரத்தில் எந்த சம்பவம் நடக்கவல்லை என்றும்ட எனது உயர்அதிகாரியான சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அதிகமான விலைக்கு மதுபாட்டில் விற்பனை செய்ததாக கூறுவது பொய் என்றும் காவல்நிலையத்தில் கையிருபபில் இருந்த மதுபாட்டில்களை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.